<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

Date: 26.09.2025
SC.No. 117/2015
பக்கம் 4
PW3 – கமல்

<u>முதல் விசாரணையின்தொடர்ச்சி</u>

என்னிடம் காட்டபடும் கத்தி மற்றும் வாட்ஸ்யைதான் போலிசார் எதிரிடமிருந்து கைப்பற்றினார்கள். அந்த கத்தி சா.பொ.ஆ1ஆகும் மற்றும் அந்த வாட்ஸ் சா.பொஆ2 ஆகும்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

06.02.2015 நான் காஞ்சிபுரம் செவிலிமேடு கிராமத்தில் வசித்து வந்தேன். எதிரியை எனக்கு பரிட்சையம் கிடையாது. சம்பவம் நடைபெற்று 10 வருடத்திற்கு பிறகுதான் நான் நீதிமன்றதிற்கு வந்துள்ளேன். 10 வருட காலமாக சுமார் 1000 நபர்களுக்குமேல் சந்தித்து இருப்பேன் என்றால் சரிதான். அனைவரையும் எனக்கு நினைவு இருக்காது என்றால் சரிதான். ஒரு அரசு அலுவலர் உயர் அதிகாரியின் அனுமதி இல்லாமல் சாட்சி அளிக்க முடியாது என்றால் சரிதான். நான் எதிரியை கைது செய்து வைக்கப்பட்டு இருந்து இடத்திற்கு செல்வதற்கு முன்பாக அங்கு என்ன நடந்தது என்ற விவரமும், காவல் துறையினர் எதிரிகளை எவ்வாறு நடத்தினார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சுமார் 5 இருந்து 6 மணிநேரம் நாங்கள் திருவேணி அக்டாமி அருகில் அந்த இடத்தில் இருந்தோம். இறந்துபோன முதல் எதிரி கண்ணனுக்கு வலது கால் ஊனமா அல்லது இடது கால் ஊனமாக என்று தற்போது ஞாபகமில்லை. முதல் எதிரியின் உருவ அமைப்பு எனக்கு ஞாபகமாக இருந்தது. முதல் எதிரி ஒல்லியாகவும், சற்று உயரமாகவும் இருந்தார். ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் கையால்

எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குற்ற எண்.22/2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேறு சில குற்ற வழக்குகளிலும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி கையெழுத்து செய்து நீதிமன்றத்தில் சாட்சியம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர்களை கட்டுபடுத்துவதற்கு சில நடைமுறை விதிகள் உள்ளது என்றால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவலர் என்ற அடிப்படையில் காவல் துறையினரிடன் இணைந்து செயல்படவேண்டிய அவசியம் உள்ளது என்றால் சரிதான். போலிஸ் ஸ்டென்டிங் ஆடர் 545 முதல் 548 வரையிலான ஆணைகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் கடமைகள் குறிதது தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவேணிக்கு அகடாமி அருகில் கடைகளும், குடியிருப்புகளும் உள்ளன என்றால் சரிதான். நான் சென்ற சமயம் பொதுமக்கள் 7 இருந்து 8 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். திருவேணி அக்டாமி ஒரு கல்வி நிறுவனம் என்றால் சரிதான். காலை 9 மணியளவில் கல்வி வளாகம் சென்ற காரணத்தில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் திருவேணி அக்டாமி வாசலுக்கு சென்றதாக சொல்லப்படும் அங்கு காவல் துறையினர் இருந்தாக வழக்கிற்காக வேண்டி பொய்யாக செல்கிறேன் என்றால் சரிதான். அதுபோல் 30.01.2015 சென்னை அம்பத்துர் ஒரு எதிரியை கைது செய்வது தொடர்பாக நான் சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் சரிதான். காவல் துறையினர் ஜோடித்து வைத்திருக்கு இதுபோன்ற வழக்குகளில் நான் சாட்சி கையெழுத்து இடுவது தான் வழக்கம் என்றால் சரிதான். போலிசாரின் வேண்டுகோளுங்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாபொ.1 கத்தியை அது

போன்ற 10 கத்திகளை வைக்கும்போது என்னால் அடையாளம் காட்டமுடியுமா என்றால் காட்டமுடியும். சாபொ.1 கத்தியில் என்னிடம் கையெழுப்பமிட்டு அதில் ஒட்டப்பட்டு இருந்ததா என்றால் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு இருந்தது அதில் என்னிடம் கையெழுப்பம் செய்யவில்லை. சாபொ1 மற்றும் சா.பொ.2 என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றும் போலிசரரின் கேட்டுகொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் சொல்லி கொடுத்து நான் ஆஜர் எதிரியை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.